நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

## தரம் : இடைநிலை – கீழ்ப்பிரிவு

*November 2008*

வினாக்கள் : 50

வழங்கப்படும் நேரம் : 60 நிமிடங்கள்


(வாசிப்பதற்கான நேரம் : 10 நிமிடங்கள் உட்பட)

**உங்கள் பதில்களைத் தரப்பட்ட வினாத்தாளில் குறியிடுக.**

**1 முதல் 4 வரையுள்ள வினாக்களுக்கு கோடிட்ட இடத்திற்கு மிகவும் பொருத்தமான சொல்லை கீழே தரப்பட்டுள்ள சொற்களில் இருந்து தெரிவு செய்து பூரணப்படுத்துக.**

## For questions 1 to 4, choose the most suitable word for the underlined space to complete the paragraph.

<u>விலங்குக் காட்சிச்சாலை</u>





விலங்குக் காட்சிச்சாலையில் கங்காரு, கொவாலா போன்ற அவுஸ்திரேலிய (1) _________ வேறு பல மிருகங்களையும் (2) ___________________ . விலங்குத் காட்சிச்சாலையிலுள்ள சில (3) ______________________ இயற்கையான சூழலில் அழிந்து வருகின்றன. அவற்றை “அழிவை எதிர்நோக்கும் மிருகங்கள்” என குறிப்பிட்டு பாதுகாப்பதற்கு (4) _____________ எடுக்கப்படுகின்றன.

(a) மிருகங்கள்
(b) மிருகங்களுடன்
(c) நடவடிக்கைகள்
(d) கண்டிருப்பீர்கள்

**5 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்கு கோடிட்ட இடத்திற்கு மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

## For questions 5 to 10, choose the correct word for the underlined space to complete the statements.

5. உடலில் களைப்பு ஏற்படும் போது சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொள்வது ________

(a) நல்லது.
(b) நள்ளது.
(c) நழ்லது.
(d) நாலாவது.

6. தொலைபேசியின் “பதில் சொல்லும் பொறி” (answering machine) ஆங்கிலத்தில் பதில் __________________

(a) அளித்தது.
(b) அழித்தது.
(c) அலித்தது.
(d) அழிந்தது.

7. விளக்கின் ஒளி பிரகாசமாய் ____________________

(a) இருந்தது.
(b) இறந்தது.
(c) இழந்தது.
(d) இலந்தது.

8. ஆங்கிலப் பாடப் பரீட்சையில் எழுபது (70) மாணவர்கள் விசேட ________________ பெற்றுள்ளனர்.

(a) சிந்திய
(b) சிட்சிலை
(c) சித்தியை
(d) சின்னிய

9. எமது கல்லூரியில் இருந்து நூறு (100) மாணவர்கள் ___________________ தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

(a) பள்கலைக் கழகத்துக்கு
(b) பல்கலைக் கழகத்துக்கு
(c) பன்கலைக் கழகத்துக்கு
(d) பண்கலைக் கழகத்துக்கு

10. பத்மாவின் குரலில் மகிழ்ச்சி _____________________ .

(a) தொனித்தது.
(b) தொணித்தது.
(c) தெளித்தது.
(d) தெழித்தது.

## 11 முதல் 15 வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்ட வசனத்தில் கோடிட்ட சொல்லிற்கான எதிர்ச் சொல்லைக் தெரிவு செய்க.

## For questions 5 to 10, choose the correct word that is opposite in meaning to the underlined word.

11. சுதா ஆசிரியரின் **<u>கேள்விக்கு</u>** பதில் அளித்தாள்.

(a) வினாவிற்கு
(b) பதிலுக்கு
(c) ஒலிக்கு
(d) ஒளிக்கு

12. சங்கிலியன் யாழ்ப்பாணத்தை ஆண்ட **<u>கடைசி</u>** அரசனாவான்.

(a) முதல்
(b) இறுதி
(c) நடு
(d) இரண்டாவது

13. எங்கள் வீட்டின் **பிற்பக்கம்** ஒரு பெரிய மரம் நிற்கின்றது.

(a) வெளிப்பக்கம்
(b) இடைப்பக்கம்
(c) நடுப்பக்கம்
(d) முற்பக்கம்

14. அப்பனின் கடிதம் குஞ்சுவிற்கு மிகவும் **மகிழ்ச்சியை** கொடுத்தது.

(a) சந்தோசத்தை
(b) கவலையை
(c) ஆர்வத்தை
(d) ஆசையை

15. இடியோசை கேட்ட போது கண்ணன் **அச்சம்** அடைந்தான்.

(a) பயம்
(b) மகிழ்ச்சி
(c) வீரம்
(d) துன்பம்

**பின்வரும் பந்தியை வாசித்து 16 முதல் 19 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**Read the text below and answer the questions 16 to 19.**

அறிவியல் சுடர் : பேராசிரியர் அ. துரைராஜா



இலங்கையைச் சேர்ந்த மறைந்த பேராசிரியர் துரைராஜா அவர்கள் ஒரு உலகப் புகழ் பெற்ற மாமனிதர். அவர் யாழ்ப்பாணத்தில் கம்பர்மலை என்ற ஒரு கிராமத்தில் பிறந்தார். தனது கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலும் பின்னர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் கற்றார்.

அங்கு மிகவும் திறமையான சித்திகள் எய்தி பல்கலைக் கழகத்தில் பொறியியல் (**Engineering**) துறையை கற்க தெரிவு செய்யப்பட்டார். இவரால் இலங்கை பொறியியல் பீட பரீட்சைகளில் ஏற்படுத்தப்பட்ட சாதனைகள் இன்னும் முறியடிக்கப்படவில்லை.

பேராசிரியர் துரைராஜா, தனது பட்டப்படிப்பை (**Postgraduate**) படிக்க, கேம்பிறிஜ் (**Cambridge**) பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். இவரால் எழுதப்பட்ட **"**துரைராஜா தேற்றம்**"** (**Thurairajah Theorem**), உலகின் பல்வேறு பல்கலைக் கழகங்களில் மண் பொறி முறையை (**Soil Mechanics**) படிப்பிக்க பயன்படுத்தப் படுகின்றது.

இளவயதிலேயே பேராசிரியர் பட்டம் இவரை தேடிவந்தது. பல்கலைக் கழகத்தில் மாணவர்களை தனது சொந்த பிள்ளைகள் போல் மதிக்கும் பண்பாட்டை கொண்டவர்.

16. எந்த துறையை கற்க, பேராசிரியர் துரைராஜா முதல் தடவையாக பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார்?

(a) மருத்துவம்
(b) விஞ்ஞானம்
(c) பொறியியல்
(d) விவசாயம்

17. என்ன பாடத்தைப் படிப்பிக்க "துரைராஜா தேற்றம்" பல்கலைக் கழகங்களில் பயன்படுத்தப் படுகின்றது?

(a) விவசாயத்துறை
(b) மண் பொறி முறை
(c) ஆயுர்வேத மருத்தவத்துறை
(d) விஞ்ஞானத்துறை

18. எந்த பல்கலைக் கழகங்கத்தில் இவர் தனது பட்டப் படிப்பை படித்தார்?

(a) ஹேம்பிறிஜ்
(b) ஹாட்லி
(c) அமெரிக்கன் மிஷன்
(d) ஒக்ஸ்பேர்ட்

19. பேராசிரியர் துரைராஜாவின் ஒரு முக்கிய பண்பு என்ன?

(a) மாணவர்கள் குற்றம் செய்தால் தண்டித்தல்.
(b) மாணவர்களை தனது சொந்த பிள்ளைகள் போல் மதித்தல்.
(c) மாணவர்களை நேசிக்காமல் பாடம் கற்பித்தல்.
(d) மாணவர்களுக்கு கல்வி கற்பிக்க மறுத்தல்.

**20 முதல் 22 வரையுள்ள வசனங்களில் கோடிட்ட சொல்லிற்கு பன்மைச் சொல்லை தெரிந்து அவற்றை பூரணப்படுத்துக.**

**For questions 20 to 22, choose the correct word that is plural to the underlined word to complete the statements.**

20. <u>**அவன்**</u> கண்காட்சிச்சாலைக்கு சென்றார்கள்

(a) அவள்
(b) அவர்
(c) அவர்கள்
(d) அது

21. அண்ணாவும் நானும் பாடசாலைக்கு துவிச்சக்கர வண்டியில் <u>**சென்றேன்.**</u>

(a) சென்றது
(b) சென்றார்கள்
(c) செல்லும்
(d) சென்றோம்

22. **<u>நான்</u>** வாழும் நாடு பல்லின மக்கள் வாழும் அவுஸ்திரேலியா.

(a) நீ
(b) அவர்கள்
(c) நீங்கள்
(d) நாங்கள்

**23 முதல் 26 வரையுள்ள வசனங்களில் கோடிட்ட சொல்லிற்கு பொருத்தமான வேறு சொல்லைத் தெரிவு செய்க.**

**For questions 23 to 26, choose the word that is similar or closest meaning to the underlined words.**

23. வாணியும் கண்ணாவும் **<u>உரையாடினார்கள்.</u>**

(a) பேசினார்கள்
(b) கேள்வி கேட்டார்கள்
(c) ஓடினார்கள்
(d) விளையாடினார்கள்

24. அஞ்சலியைப் பார்த்தவுடன் வாணி **<u>குதூகலம்</u>** அடைந்தாள்.

(a) மகிழ்ச்சி
(b) துக்கம்
(c) கவலை
(d) வெட்கம்

25. பிரபா மிகவும் **<u>இலகுவான</u>** முறையில் கணித பாட வேலையை செய்தான்.

(a) விருப்பமான
(b) சுலபமான
(c) கடினமான
(d) நேர்த்தியான

26. ராதாவிற்கு பரத நாட்டியத்தில் மிகுந்த **<u>அபிமானம்</u>** உண்டு.

(a) ஆர்வம்
(b) கடினம்
(c) சுலபம்
(d) துக்கம்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**27 முதல் 37 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

## Choose the best answer for the questions 27 to 37.

27. தமிழர்கள் சூரியனுக்கு நன்றி சொல்வதற்காக எடுக்கும் தினம் எது?

    (a) தீபாவளி
    (b) சித்திரைப்புத்தாண்டு
    (c) தைப்பொங்கல்
    (d) ஆடிப்பிறப்பு

28. மேகங்களற்ற தெளிவான வானம் என்ன நிறமாக இருக்கும்?

    (a) கறுப்பு
    (b) சிவப்பு
    (c) மஞ்சள்
    (d) நீலம்

29. அவுஸ்திரேலியாவில் அதிக மக்கள் வாழும் நகரம் எது?

    (a) மெல்பன்
    (b) பேர்த்
    (c) கன்பரா
    (d) சிட்னி

30. “மகாகவி” என அழைக்கப்பட்ட கவிஞரின் பெயர் என்ன?

    (a) கம்பர்
    (b) வள்ளுவர்
    (c) பாரதியார்
    (d) இளங்கோ அடிகள்

31. “தமிழ்ப் புதுவருட தினம்” எந்த மாதத்தில் கொண்டாடப்படும்?

    (a) தை
    (b) மார்கழி
    (c) சித்திரை
    (d) ஆடி

32. இந்துக்களின் வழிபாட்டுத்தலம் கோவில். அது போல் கிறிஸ்த்தவர்களின் வழிபாட்டுத்தலத்தை எப்படி கூறுவோம்?

    (a) பள்ளிக்கூடம்
    (b) தேவாலயம்
    (c) சிவாலயம்
    (d) பள்ளிவாசல்

33. “அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” என்ற வாக்கை கூறியவர் யார்?

அடுத்த பக்கத்தில் தொடரும்.

(a) திருவள்ளுவர்
(b) யேசுநாதர்
(c) கௌதமர்
(d) ஔவையார்

34. மூவேந்தர் என தமிழில் நாம் யாரைக் குறிப்பிடுகின்றோம்?

(a) சேரன், சோழன், பாண்டியன்
(b) சேரன், பல்லவன், குசேலன்
(c) சேரன், பாண்டியன், பல்லவன்
(d) சங்கிலியன், சோழன், குசேலன்

35. சிலப்பதிகாரத்தின் நாயகியான கண்ணகி எந்த மாநகரத்தை எரித்தாள்?

(a) மதுரை
(b) யாழ்ப்பாணம்
(c) காஞ்சி
(d) மட்டக்களப்பு

36. ஒரு விடயம் மிகத் தெளிவாகத் தெரியுமாயின் அதை இப்படித் தமிழில் சொல்வார்கள்?

(a) உள்ளங்கை நெல்லிக்கனி போல
(b) ஓருடல் ஈருயிர் போல
(c) நகமும் சதையும் போல
(d) கீரியும் பாம்பும் போல

37. பூக்களைத் தொடுத்து கட்டுவது மலர்மாலை! அது போல மாவிலை, தென்னோலை போன்றவற்றை கொண்டு கட்டுவது எது?

(a) கும்பம்
(b) தீபம்
(c) தோரணம்
(d) அலங்காரம்

## 38 தொடக்கம் 39 வரையான வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி வாக்கியங்களை அமைத்துக் காட்டுக.

## For questions 38 to 39, arrange the words in the best way to form meaningful statements.

38. அப்பனும் / சிறுவயதில் / ஓடிப்பிடித்து / குஞ்சுவும் / விளையாடினார்கள்.

(a) அப்பனும் சிறுவயதில் குஞ்சுவும் ஓடிப்பிடித்து விளையாடினார்கள்.
(b) அப்பனும் குஞ்சுவும் சிறுவயதில் ஓடிப்பிடித்து விளையாடினார்கள்.
(c) அப்பனும் குஞ்சுவும் விளையாடினார்கள் சிறுவயதில் ஓடிப்பிடித்து.
(d) ஓடிப்பிடித்து அப்பனும் குஞ்சுவும் சிறுவயதில் விளையாடினார்கள்.

39. வாணியும் / வரவை / விமானநிலையத்தில் / கலாவின் / நின்றார்கள் / கண்ணனும் /எதிர்பார்த்து.

(a) வாணியும் கண்ணனும் கலாவின் வரவை எதிர்பார்த்து விமானநிலையத்தில் நின்றார்கள்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

(b) வாணியும் கலாவின் வரவை எதிர்பார்த்து விமானநிலையத்தில் நின்றார்கள் கண்ணனும்.
(c) வரவை விமானநிலையத்தில் வாணியும் கலாவின் கண்ணனும் எதிர்பார்த்து நின்றார்கள்.
(d) வாணியும் கண்ணனும் வரவை விமானநிலையத்தில் கலாவின் எதிர்பார்த்து நின்றார்கள்.

**40 தொடக்கம் 41 வரையான வினாக்களுக்கு பின்வரும் பாடல் வரிகளை வாசித்து லிடையளிக்கவும்.**

**Read the following part of the poem and answer questions 40 to 41.**

**என்னை இறைவன் இவ் உலகில் படைத்தனன்**
**தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே!**

40. இறைவன் என்ற சொல்லுக்கு மிகவும் பொருத்தமான சொல்லை கீழே தரப்பட்டுள்ள சொற்களில் இருந்து தெரிவு செய்க.

(a) தெய்வம்
(b) ஆண்டவன்
(c) கடவுள்
(d) (a) (b) (c) ஆகிய எல்லா சொற்களும் பொருந்தும்

41. இந்த கவிதையை இயற்றியவர் தன்னை இறைவன் எதற்காக படைத்தான் என கூறுகின்றார்?

(a) நன்றாக தமிழ் செய்யும்படி
(b) நன்றாக உலகத்தை படைக்க
(c) நன்றாக உலகத்தை காக்க
(d) நன்றாக இறைவனை வழிபட

**42 முதல் 45 வரையுள்ள வினாக்களுக்கு பின்வரும் கவிதையை வாசித்து விடையளிக்கவும்.**

**Read the following poem and answer questions 42 – 45.**

**<u>பொம்மைக் கலியாணம்</u>**

**பொம்மைக்கும் பொம்மைக்கும் கலியாணம்,**
**பூலோகமெல்லாம் கொண்டாட்டம்;**
**பாவைக்கும் பாவைக்கும் கலியாணம்,**
**பகலும் இரவும் வேலையாம்.**

**குயில்கள் இனிய குரலிற் பாடும்;**
**மயில்கள் நல்ல நடனம் ஆடும்.**
**வண்டினம் எல்லாம் வந்து கூடி,**
**வாய்க்கினிய அமுதம் வைக்கும்.**

42. குயில:கள் என்ன செய்யும் என கவிஞர் கூறுகின்றார்?

(a) பாடும்
(b) ஆடும்
(c) கத்தும்
(d) கூவும்

43. கவிதையில் நடனம் ஆடும் பறவை எது?

(a) மயில்
(b) குயில்
(c) பூச்சி
(d) வண்டு

44. வண்டினம் என்ன செய்யும் என கவிஞர் வர்ணிக்கின்றார்?

(a) நடனம் ஆடும்
(b) இனிய குரலில் பாடும்
(c) அமுதம் வைக்கும்
(d) நீராடும்

45. "**கலியாணம்**" என்ற சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்க.

(a) பிறந்த தினம்
(b) திருவிழா
(c) திருமணம்
(d) கொடியேற்றம்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**46 முதல் 50 வரையுள்ள வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து வசனத்தை பூர்த்தி செய்க.**

**For questions 46 to 50, choose the best phrase in order to complete the statements.**

46. இன்றைக்கு ஒருவேளை மழை ________________ .

(a) பெய்ய முடியும்
(b) பெய்யலாம்
(c) பெய்ய வேண்டும்
(d) பெய்ய வேண்டாம்

47. எனக்கு கால் வலிக்கிறது. என்னால் வேகமாக ________________ .

(a) நடக்கலாம்
(b) நடக்க வேண்டாம்
(c) நடக்க முடியாது
(d) நடக்க கூடாது

48. வெளியில் ஒரே சத்தம். ஆகையினால் அவனால் எதையும் ________________ .

(a) கேட்டிருக்கக் கூடாது
(b) கேட்டிருக்க முடியாது
(c) கேட்டிருக்கலாம்
(d) கேட்டிருக்க வேண்டும்

49. உங்களால் எங்கள் வீட்டுக்கு ________________ .

(a) வரவேண்டுமா?
(b) வரலாமா?
(c) வரமுடியுமா?
(d) வரவேண்டாமா?

50. என்னிடம் குடை இருந்தும் நான் மழையில் ________________ .

(a) நனைந்து விட்டேன்
(b) நனைய முடியாது
(c) நனைக் கூடாது
(d) நனைய வேண்டும்